10.03.2026 OS.No.35/2024 DW1 Name :.ஜபினா

குறுக்கு விசாரணை

1. நானும் வாதியும் ஒரே ஊரை சார்ந்தவர்கள். என்னுடைய வீட்டிலிரிருந்து சுமார் 1/2 கிமீ தொலைவில் வாதி வீடு உள்ளது. எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியாது. வழக்கில் கூறியுள்ளபடி நான் வாதியிடம் ரூ.3,00,000/- பணம் கடனாக கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு தற்சமயம் அதை மறுத்து பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது. அதை ஆய்விற்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை. வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது.
2. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்பதை மறுத்து பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார். அதை நான் பெற்றுக்கொண்டுள்ளேன். அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வாதிக்கு எதிராக காவல்நிலையத்தில் கொடுத்துள்ள புகார் தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை.
3. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் கொடுத்துள்ளேன். அவ்வாறு எந்த பதில் அறிவிப்பும் கொடுக்காமல் பொய்யாக கூறுகிறேன் என்றால்

சரியல்ல. என் கணவர் மீது வாதி அ.வ.எண். 36/2024 என்ற வழக்கு போட்டுள்ளார். வாதிக்கு கொடுக்கவேண்டிய பணத்தை திருப்பி கொடுக்காமல் பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 10/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.10 16:14:48 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.